# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590**

**ஆணை நாள்: 10.11.2020**

**முன்னிலை**

## திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண்.NC2513/F/2019 (SA5232/F/2019)**

திரு K.தனராஜ் ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(சேலம்) லிட்.,
எண்.12, இராமகிருஷ்ணா ரோடு,
சேலம் - 636 007. ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 21.01.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 05.03.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 03.06.2019 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 03.10.2019 |
| ஆணை பெறப்படாத மனு நாள் | 30.10.2019 |

******

# ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 03.10.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொதுத் தகவல் அலுவலரை 15 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தினால், இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று

(10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்விசாரணையில் மனுதாரர் திரு K.தனராஜ் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு ஆர்.துரைராஜ், உதவி மேலாளர் (தணிக்கை), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிட்., இராமகிருஷ்ணா ரோடு, சேலம் ஆகியோர் தொலைபேசி விசாரணையில் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 21.01.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்ட நிர்வாகத்தில் பணிபுரிந்து வந்த கே. தனராஜ் பணி எண்.3117 ஓட்டுநர் ஆகிய தான் சம்பந்தப்பட்ட தொழிற்தாவா சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தில் நிலையாணைகள் செல்லத்தக்க தன்மை குறித்தும், அதன் பயன்பாடு குறித்தும், அதன் செல்லும் நிலை குறித்தும் தொழில் தாவா IESOP 01/2010 என்ற தொழிற்தாவா 08.09.2010ல் நிலுவையில் இருந்ததா என்ற விவரம், தொழிற்தாவா நிலுவையில் இருந்ததால் நிலுவையில் உள்ள சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தில் தனது வேலை நீக்கத்திற்கு நிர்வாகம் அனுமதி கேட்டு, அனுமதி மனு 08.09.2010ல் இருந்து இதுநாள் வரையிலும் வேலை நீக்கத்திற்கு அனுமதி வேண்டி மனு செலுத்தியுள்ளதா இல்லையா என்ற விவரம் போன்ற வேலை நீக்கம் தொடர்பான தகவல்களை 21 இனங்களில் குறிப்பிட்டு வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிட்., சேலம் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ அரசு சார்புச் செயலாளர், போக்குவரத்துத் துறை, தலைமைச் செயலகம், சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனு 29.01.2019 தேதியிட்டு, உரிய பொதுத் தகவல் அலுவலருக்கு பிரிவு 6(3)ன்படி மாறுதல் செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லை என தெரிவித்தும், தான் கோரிய உரிய தகவல்களை அளிக்க கேட்டும், 05.03.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். 21.03.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கியுள்ளார். திருப்தியடையாத மேல்முறையீட்டாளர், தான் கோரிய தகவல் உரிய காலத்தில் வழங்கப்படவில்லை எனவும், குறைபாடுடைய தகவல் வழங்கியதாகவும் தெரிவித்து, முழுமையான தகவல்களை அளிக்க ஆணையிடவும், தகவல் வழங்காத அலுவலர்களுக்கு பிரிவு 20(1)ன் படி நடவடிக்கை எடுக்கவும் கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 03.06.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது 03.10.2019 அன்று விசாரணை மேற்கொண்டு **SA5232/F/2019** ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 15 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 30.10.2019 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் கோரிய விடுபட்ட இனங்களுக்கான முழுமையான தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. விசாரணையின்போது பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரிய விடுபட்ட இனங்களுக்கான முழுமையான தகவல்களை 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்குவதாக தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையும் ஆணையம் பரிசீலனை செய்ததில், மேல்முறையீட்டாளருக்கு உரிய, முழுமையான தகவல் வழங்கப்படாமல் உள்ளது தெரிய வருகிறது. உரிய தகவல் வழங்காத அலுவலரை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது. விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கிறது:

- **மேல்முறையீட்டாளருக்கு ஆணையத்தின் ஆணைக்குப் பிறகும் பதில் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலரை தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் பதிவுத் தபால் மூலம் ஆணையத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- **மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 21.01.2019 தேதியிட்ட மனுவில் கோரிய விடுபட்ட இனங்களுக்கான முழுமையான தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, வழங்கப்பட்ட தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- **மேல்முறையீட்டாளர் 21.01.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.**NC2513/F/2019 (SA5232/F/2019)

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(சேலம்) லிட்.,
எண்.12, இராமகிருஷ்ணா ரோடு,
சேலம் - 636 007.

<u>**மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்**</u>

திரு K.தனராஜ்,
எண்.100-14, KSP நகர்,
திருச்சி மெயின் ரோடு,
ஸ்டேட் பேங்க் அருகில்,
மல்லூர் அஞ்சல்,
சேலம் மாவட்டம் - 636 203.

**Copy to: Judgement File/ Spare**

**JE / PA 19.11.2020**